# உறவுகளைக் கட்டியெழுப்புதல்

Transcribed from a message spoken in September, 2012 in Chennai, India

By *R.S.Milton*

## தேவ மக்கள்

நாம் தேவனுடைய மக்கள். பல ஆண்டுகள் நாம் தேவனுடைய மக்களாக, கிறிஸ்தவர்களாக, வாழ்கிறோம். ஆனால், ஒரு காரியத்தைக்குறித்து நான் மிகவும் பாரப்படுகிறேன். அது எனக்கு மிகவும் முக்கியமானதாகத் தோன்றுகிறது. அது என்னவென்றால் 5, 10, 20, 30 ஆண்டுகள் ஆனபிறகும்கூட இன்னொரு நபருடன் நடைமுறையில் எப்படி உறவுகொண்டு வாழ்வது என்று தேவனுடைய மக்கள் கற்றுக்கொண்டதுபோல் எனக்குத் தெரியவில்லை. என்னுடைய பாரத்தை நான் சொல்லிவிட்டேன். பல ஆண்டுகள் தேவனுடைய மக்களாக வாழ்ந்தபோதுங்கூட இன்னொரு நபருடன் எப்படி நேர்த்தியான உறவுகொண்டு வாழ்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் பல ஆண்டுகள் தேவனுடைய மக்களாக வாழ்கிறார்கள் என்று நான் சொல்லும்போது, அதன் பொருள் என்னவென்றால் அவர்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்கிறார்கள்; ஜெபிக்கின்றார்கள்; தேவ னுடைய மற்ற மக்களுடன் ஐக்கியம் கொள்ளுகிறார்கள்; தேவனுக்காக சாட்சியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆவலும், பிரயாசமும் அவர்களுடைய வாழ்க்கையில் காணப்படுகிறது; தேவனுக்காக சில நற்கிரியைகளைச் செய்கிறார்கள்; சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள்; பலரை கர்த்தருக்குள் நடத்துகிறார்கள்; சபைக்குச் செல்கிறார்கள்.

ஆனாலும், நடைமுறையில் இன்னொரு நபருடன் எப்படி உறவுகொண்டு வாழ்வது என்று வரும்போது அவர்களுக்குப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. உங்கள் வாழ்க்கையில் அல்லது மற்றவர்களுடைய வாழ்க்கையில் நீங்கள் இதைக் கவனித்திருக்கலாம். இதுவரை நீங்கள் கவனிக்கவில்லையென்றால் வரப்போகிற நாட்களில் கவனிப்பீர்கள்.

## கணவன், மனைவி உறவு

மிக முக்கியமாக, ஒரு கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்கிற வாழ்க்கையில்கூட பல போராட்டங்கள் இருக்கின்றன. தேவனுடைய மக்களாக இருக்கிற ஒரு கணவன் மனைவியால்கூட நேர்த்தியாக வாழமுடியவில்லை. தேவனுடைய மக்கள் பலர் கணவன் மனைவி என்ற அடிப்படை உறவின் வாழ்க்கையில்கூட நேர்த்தியாக வாழ்வதில்லை என்று சொல்வதைவிட வாழ முடிவதில்லை என்று சொல்லலாம்.

இது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம். "அவிசுவாசிகளாகிய கணவனுக்கும் மனைவிக்கும் இப்படி நேரிடலாம்; விசுவாசிகளுக்கு இப்படி நேரிடாது," என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். "அவிசுவாசிகள் ஒருவேளை இப்படி வாழலாம். அவர்கள் வாழ்க்கையில் இப்படி நேரிடலாம். ஒரு கணவனும் மனைவியும் எப்படி இசைவாக வாழ வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாமல் போகலாம். ஆனால், ஒரு கணவனும் மனைவியும் தேவனுடைய மக்களாக இருந்தால் எப்படி இசைவான, இனிமையான வாழ்க்கை வாழ்வது என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்," என்று நாம் நினைக்கலாம். நான் பார்த்தவரை, அவர்கள் அப்படியொன்றும் இசைவான, இனிமையான வாழ்க்கை வாழ்வதில்லை. காரணம் என்னவென்றால் அது அவர்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிந்த விசுவாசிகளாகிய கணவன் மனைவிகளிடத்தில், "நீங்கள் சண்டை போட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டுப்பாருங்கள். சண்டைபோடாத கணவன் மனைவியைப் பார்ப்பது அரிது. நாம் தேவ தூதர்கள் அல்ல என்று எனக்குத் தெரியும். இரண்டுபேர் உறவுகொண்டு வாழும்போது பிரச்சினைகள் வரும். யாராக இருந்தாலும் சரி. இதனால் சாகிறவரை நாம் சண்டைபோட்டுக்கொண்டேயிருக்கலாம் என்ப தல்ல இதன் பொருள்.

"உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்," (பிலி 2:12) என்று பவுல் எழுதுகிறார். அதாவது நாம் நம்முடைய உறவுகளை நேர்த்தியாகக் கட்டியெழுப்ப வேண்டும்; அதற்காகப் பிரயாசப்பட வேண்டும். இரண்டுபேர் திருமணம் செய்தவுடன் அவர்களுடைய உறவு மிகவும் இசைவான, நேர்த்தியான உறவாக மாறிவிட்டது என்ற அர்த்தம் இல்லை. அவர்கள் *உறவு* என்ற பந்தத்துக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பந்தத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இது திருமணத்தன்று பேச வேண்டிய காரியம் என்று நீங்கள் நினைக்கலாம். இதை அன்றைக்குப் பேச முடியாது. ஏனென்றால், திருமணத்தில் பேசுவது மிகவும் பதட்டமான காரியம். அன்றைக்குப்

பேசுவதைப் பெரும்பாலும் யாரும் கவனிக்க மாட்டார்கள். பேசி முடித்தவுடன் சீக்கரமாக அன்பின் விருந்துக்குப் போக வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கிநிற்கும். இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, இது சாகவசமாகப் பேச வேண்டிய காரியம். வேகவேகமாகப் பேச வேண்டிய காரியம் அல்ல.

இதைப்பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு கணவனும் மனைவியும் தேவனுடைய மக்களாக இருந்தபோதும்கூட, எல்லாம் மிகவும் மகிழ்ச்சியாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதற் காக அந்த உறவு அப்படியே போய்க்கொண்டிருக்கும் என்று எடுத்துக்கொள்ளவோ, நினைக்கவோ கூடாது. இந்த உறவு அல்லது பந்தம் உண்மையிலேயே ஒவ்வொருநாளும் கட்டியெழுப்பப்படுகிறதா என்பதைக்குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு விவசாயி தன்னுடைய பயிரைக் குறித்து ஒவ்வொரு நாளும் எச்சரிக்கையாக இருப்பதைப்போல, அந்த இரண்டு பேரும் அந்த உறவை ஒவ்வொரு நாளும் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் கண்காணிக்க வேண்டும்; ஒவ்வொரு நாளும் இந்த உறவு வளர்கிறதா, கட்டியெழுப்பப்படுகிறதா, கட்டியெழுப்பப்படுவதற்கு என்னென்ற இடையூறுகள் உள்ளன, இந்த இடையூறுகளைக் களைவது எப்படி என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். கணவன் மனைவிக்கிடையேயுள்ள உறவை நான் ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன். இது முக்கியமான உறவு.

**பலவகை உறவுகள்**

இதுபோல் பல வகையான உறவுகள் உள்ளன. நான் சொல்லுகிற இந்தக் காரியம் கணவன் மனைவிக்கும் மட்டும் அல்ல, பெரும்பாலும் எல்லா உறவுகளுக்கும் பொருந்தும். தேவனுடைய மக்களுக்கிடையேயுள்ள உறவு, இரண்டு சகோதரர்களுக்கிடையேயுள்ள உறவு, இரண்டு சகோதரி களுக்கிடையயேயுள்ள உறவு போன்ற எல்லா உறவுகளுக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தும்.

குடும்பத்தைக் கட்டியெழுப்புவது எப்படி என்பதைப்பற்றிப் பேச பல நாட்கள் மாநாடுகள் நடத்து கிறார்கள். அத்தனை நாட்கள் பேசுவதற்கு அவ்வளவு காரியங்கள் இருக்கின்றன என்பது உண்மை தான். இதைப்பற்றி மிகவும் நேர்த்தியாகப் பேசுகிற பல சகோதரர்களை நான் பார்த்திருக்கிறேன்.

**உறவுகளில் புயல்**

உறவுகளை நேர்த்தியாகவும், இசைவாகவும், இனிமையாகவும் கட்டியெழுப்புவதற்கு எல்லாவற்றை யும் வடிகட்டி ஒரேவொரு காரணம்தான் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் என்ன காரணம் சொல் வீர்கள்? இதைப்பற்றி நீங்கள் மற்ற சகோதர சகோதரிகளிடமும் கேட்கலாம். அவர்கள் தங்கள் அனு பவத்திலிருந்து உங்களுக்குக் கற்றுத்தரலாம்.

10, 20, 30, 40, 50 வருடங்களானபிறகும் உறவுகளில் புயல் வீசும். எத்தனை வருடங்களானாலும், எப்பேர்ப்பட்ட உறவிலும் எப்போது வேண்டுமானாலும் புயல் வீசலாம். இரண்டு சகோதரர்களுக் கிடையே 50 வருடங்களாக நல்ல நேர்த்தியான உறவு இருக்கலாம். 50 வருடங்கள் கழித்து ஒரு நாள் அந்த உறவில் புயல் வீச முடியுமா? முடியும். புயல் வீசாது என்று நினைத்தால் நாம் அறி விலிகள். எல்லா உறவுகளும் பரீட்சிக்கப்படும். ஒரு மனைவி தன் கணவனைப்பற்றி, "அவருக்கு என் மேல் அன்பேயில்லை. அவர் என்னை நம்பவேயில்லை," என்று சொல்லலாம். திருமணமாகி 25, 30 ஆண்டுகளுக்குப்பின் இப்படிச் சொல்லுபவர்கள் உண்டு. எனவே, எத்தனை ஆண்டுகளானாலும் உறவுகள் அடி வாங்கும்.

எனவே, இசைவான உறவைக் கட்டியெழுப்புவது எப்படி என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உறவுகளில் புயல் வீசத்தான் செய்யும், உறவுகள் அடி வாங்கத்தான் செய்யும் என்றால் நாம் இப் போது என்ன செய்ய வேண்டும்? "எப்படியும் உறவுகள் அடி வாங்கத்தான் செய்யும், அடி வாங் கிட்டுப் போகட்டும்; புயல் வீசத்தான் செய்யும், வீசிட்டுப் போகட்டும்," என்று இருக்கலாமா? உறவுகள் எப்படியும் சிதையும் என்பதால் யாருக்கும் எந்த நன்மையும் செய்யக்கூடாது என்று தீர்மானிக்கலாமா? இப்படி இருக்கவோ அல்லது தீர்மானிக்கவோ கூடாது. அது தவறு. இது விரக்தி யின் வார்த்தை.

**தேவன் உண்மையுள்ளவர்**

ஒன்றை நான் சாட்சியாக சொல்ல முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் நாம் செய்கிற ஒரு நன்மைக்குக்கூட நமக்குப் பிரதிபலன் வராமல் போகாது. இதை நான் ஏட்டறிவாகச் சொல்லவில்லை. இதை நான் அனுபவித்துச் சொல்லுகிறேன். யாருக்கு நன்மை செய்தோமோ, அல்லது யாருக்காக எல்லாவற்றையும் இழந்தோமோ அவரிடமிருந்து நமக்குப் பிரதிபலன் வராது;

வராமல் போகலாம்; ஆனால், தேவன் நமக்கு எப்படியோ மாபெரும் பிரதிபலனைத் தருவார். இன்னும் சொல்லப்போனால் நாம் யாருக்கு நன்மை செய்தோமே அவரிடமிருந்து பிரதிபலன் வராமல் இருப்பது நல்லது. ஏனென்றால், ஒருவேளை அவர் திருப்பித் தந்தால் எவ்வளவு வருமோ அல்லது என்ன வருமோ அதைவிடப் பன்மடங்கு தேவன் இன்னொரு திசையிலிருந்து நன்மையைத் நமக்குத் தருவார். நீங்கள் இதை நம்பலாம். கொடுப்பதிலே அல்லது இழப்பதிலே தேவனுக்காகத் தாராளமாய்க் கொடுக்கலாம், தாராளமாய் இழக்கலாம். ஒருவேளை கொஞ்சம் அளவுக்கு மிஞ்சி கொடுத்துவிட்டோம் அல்லது இழந்துவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். அதற்காக வருத்தப்படலாமா? "இப்படியெல்லாம் நாம் தேவனுக்காகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை, கொஞ்சம் அளவுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டோம்," என்று நாம் நினைக்கலாம். ஆனால், வருத்தப்பட வேண்டாம். அதைவிடப் பல மடங்கு தேவன் திருப்பித் தருவார். எனவே, நீங்கள் தைரியமாகக் கொடுக்கலாம். அதுபோல பயந்து கொடுக்கவேண்டிய அவசியமும் இல்லை.

எல்லா உறவுகளையும் கட்டியெழுப்புவதற்கு நாம் கொடுக்க வேண்டும். உறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் இழக்க வேண்டும். எதை இழக்க வேண்டும்? பணம் உட்பட எல்லாவற்றையும் இழக்க வேண்டியிருக்கும். எனவே, இழப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறவன், *எல்லாவற்றையும் இழப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறவன் உறவுகளைக் கட்டியெழுப்புவான்.*

மிகவும் அற்புதமான உறவைக் கட்டியெழுப்பினவர்கள் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்தவர்களே. இந்தக் கோட்பாடு கணவன் மனைவிக்கிடையேயுள்ள உறவு உட்பட எல்லா உறவுகளுக்கும் பொருந்தும்.

## இயேசுவும், சீடர்களும்

எல்லா உறவுகளும் பரீட்சையினூடாய், புயலினூடாய், போகத்தான் செய்யும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களைக்குறித்து ஒருநாளும் ஏமாற்றம் அடையவேயில்லை. அவர் தம் சீடர்களைக் குறித்து எப்போதாவது வெறுப்படைந்து பேசினாரா? உங்களுக்கு அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏதாவது நினைவுக்கு வருகிறதா? அவர் என்றைக்காவது, எங்கேயாவது, "இவர்களுக்குச் செலவழிக்கிற நேரத்துக்குப்பதிலாக வேறு எதையாவது செய்யலாம்," என்பதுபோல் விரக்தியடைந்தோ அல்லது ஏமாற்றமடைந்தோ அல்லது தோல்வியடைந்தோ பேசினதாக உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர் யூதாசைப்பற்றிக்கூட அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால் மனிதன் எப்படிப்பட்டவன் என்று அவ ருக்குத் தெரியும். "இவர்கள் தோற்றுப்போகவே மாட்டார்கள், விழுந்துபோகவே மாட்டார்கள்," என்ற பெரிய எதிர்பார்ப்போடு அவர் வரவில்லை. இப்படிப்பட்ட எண்ணத்தோடு அவர் தம் சீடர்களை அழைக்கவும் இல்லை.

நாம் விழக்கூடியவர்கள், தோற்றுப்போகக்கூடியவர்கள், மண்ணைக் கவ்வக்கூடியவர்கள்; எனவே, இது நாம் விழுந்துகொண்டேயிருக்கலாம், தோற்றுக்கொண்டேயிருக்கலாம் என்பதற்கான சலுகை அல்ல. இது அப்படிப்பட்ட மனப்பாங்குக்கு அவர் கொடுக்கிற அனுமதி அல்ல. நாம் இதை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமையாக, சலுகையாக, அனுமதியாக, எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒவ்வொரு தோல்விக்கும், வீழச்சிக்கும், ஒரு விளைவு உண்டு. இது நம்மெல்லாருக்கும் கொடுக்கப்படும் ஓர் எச்சரிக்கை. பயத்தோடும் நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும் (பிலி. 2:12). தேவன் தம் இரக்கத்தால் அதைக் குணமாக்குகிறார். ஆனால் நமக்கு ஓர் இழப்பு இருக்கத்தான் செய்யும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சீடர்களுக்குமிடையேயிருந்த உறவு புயல் வழியாகப் போனது. அவர்களுடைய உறவில் வீசிய புயலில் பேதுருகூட நிற்கமுடியவில்லை. "அவரை எனக்குத் தெரியாது," என்று பேதுரு இயேசுவை மறுதலித்தார். ஆனால், அந்த உறவை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு கர்த்தருடைய வழியைப் பார்க்க வேண்டும். அவர் உறவை மீண்டும் சீர்ப்படுத்துகிறார், பழைய நிலைக்குக் கொண்டுவருகிறார். பேதுருவோடு இருந்த உறவை அவர் சீரமைக்கிறார். "இவனோடு இனி உறவு வைத்துக்கொள்வதா?" என்று அவர் நினைக்கவில்லை. "இவன் உறவு வைத்துக்கொள்வதற்குத் தகுதியானவன் இல்லை" என்றோ "இவன் உறவு இனி ஒருபோதும் வேண்டாம்" என்றோ ஆண்டவராகிய இயேசு நினைக்கவுமில்லை, செயல்படவுமில்லை. "இவன் இடுக்கண் களைந்தவன் அல்ல, இவன் இடுக்கண் ஏற்படுத்தினவன். இவன் நட்புக்குக் களங்கம் உண்டாக்கியவன்," என்று அவர் நினைத்தாரா? இப்படிப்பட்ட எண்ணம் கணவனைப்பற்றியும் வரலாம், மனைவியைப்பற்றியும் வரலாம், சகோதர சகோதரிகளைப்பற்றியும் வரலாம்.

ஆபிரகாம் ஒருமுறை தன் மனைவி சாராளைத் தன் சகோதரி என்று அறிமுகப்படுத்துகிறான். அவள் அவனுடைய மனைவி என்று தெரிந்தவுடன் அபிமலேக்கு என்ற அரசன் அவனைப் பார்த்து, "நீ ஏன் பொய் சொன்னாய்? நீ பொய் சொல்லி என்னையும், என் குடும்பத்தையும் சாபத்தில் சிக்கவைக்கப் பார்த்தாயே" என்று அவனைக் கடிந்துகொண்டான். உடனே ஆபிரகாம், "அப்படியல்ல, இங்கு இருக்கிற மனிதர்களெல்லாம் தீய மனிதர்கள், பொல்லாதவர்கள், என்று பயந்து, நான் இப்படிச் சொன்னேன். ஆனால், ஒருவகையில் அவள் என் சகோதரிதான்," என்று சொன்னான். அவர் சொல்வது சமாளிப்பதுபோல் தோன்றுகிறது. ஒருவேளை சாராளும் பயந்திருக்கலாம். சாராள் ஆபிரகாமைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்? அவள் என்ன நினைத்திருப்பாள், என்ன பேசியிருப்பாள் என்று நம்மால் கொஞ்சம் யூகிக்க முடியும். "உம்மை நம்பி உம் பின்னால் வரமுடியாது" என்று அவள் சொல்லியிருப்பாளா? சொல்லியிருக்கலாம். தெரியாது. எழுதப்படவில்லை. வேதாகமத்தில் எல்லாவற்றையும் எழுதவேண்டிய அவசியம் இல்லை. முக்கியமான காரியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

ஓர் உறவு புயலின்வழியாகப் போகிறது. அதன்பின், "இனிமேல் பேதுருவோடு உறவுகொள்வது என்ற கேள்வியே இல்லை. அவன் உறவுகொள்வதற்குத் தகுதியானவன் இல்லை என்று நிரூபித்துவிட்டான்," என்று இயேசு கிறிஸ்து நினைத்தாரா? இப்படிப்பட்ட மனிதனைக்குறித்து இப்படி நினைப்பது சரிதானே! தம்மைத் தெரியாது என்று மறுதலித்த ஒருவனைக்குறித்து நீங்கள் என்ன நினைப்பீர்கள்? என்ன செய்வீர்கள்? பேதுரவைத் தேடிப்போகமுடியுமா? தேடிப்போவாமா?

ஏறக்குறைய நாற்பது நாட்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பேதுருவின் பின்னால் போகிறார்; சிதைக்கப்பட்ட உறவை சீரமைப்பதற்காக அவன்பின்னே போகிறார். எந்த உறவை? "அவரை எனக்குத் தெரியவே தெரியாது," என்று மறுதலித்தவன்பின்னால்? நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? "ஒருதடவை அல்லது இரண்டுதடவை போகலாம், பிரதர். சரிப்படவில்லையென்றால் அதற்குப்பின் போகவேண்டிய அவசியம் இல்லை," என்று நாம் நினைக்கலாம்.

சகோதரர்களுக்கிடையேயுள்ள உறவு, சகோதரிகளுக்கிடையேயுள்ள உறவு, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயுள்ள உறவு-இரத்தசம்பந்தமான உறவு, ஆவிக்குரிய உறவு, அலுவலக உறவு- என இப்படி எத்தனையோ உறவுகள்! மிக முக்கியமாக கணவன் மனைவிக்கிடையேயுள்ள உறவு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் பேதுருவுக்குமிடையே இருந்த உறவில் ஏற்பட்ட இப்படிப்பட்ட உடைசலைப் போன்று கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்படாது என்று தயவுசெய்து நினைக்க வேண்டாம். அவர்களுக்கிடையே இப்படிப்பட்ட புயல் வீசாது என்றோ, தவறாகப்புரிந்துகொள்ளுதல் சம்பவிக்காது என்றோ தயவுசெய்து நினைக்க வேண்டாம்.

நண்பன், சகோதரன், சகோதரி என்றால், "வந்தால் வா, வராவிட்டால் போ," என்று சொல்லிவிடலாம், அவிழ்த்துவிடலாம். அந்த உறவிலே நாம் அவ்வளவு பெரிய அக்கறை செலுத்த வேண்டிய. அவசியம் இல்லாமல் போகலாம். ஆனால், கணவன் மனைவிக்கிடையேயுள்ள உறவு அப்படியல்ல. எனவே, இந்த உறவை நாம் உதாசீனம் பண்ணமுடியாது என்று நாம் நினைக்கலாம். ஆனால், உலக மனிதர்களுக்கிடையே அந்த உறவும் பாழ்பட்டுப்போயிற்று. கணவன் மனைவி உறவிலும்கூட, "நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டேன். கடந்த *5* வருடம், *10* வருடம், *20* வருடம், *30* வருடங்களாக நான் பார்த்துவிட்டேன். இந்த உறவுக்கு அவன் பாத்திரவான் அல்ல. இந்த உறவுக்கு அவள் பாத்திரவதி அல்ல," என்று மக்கள் சொல்வதுண்டு.

## அடிப்படைத் தேவை

எல்லா உறவுகளும் புயலின்வழியாகச் செல்லும். அதைத் தாங்குவதற்கு அல்லது அந்த உறவு பலப்பட்டு வளர்வதற்கு அடிப்படையாக என்ன தேவை? நாம் செய்த நன்மைகளெல்லாம் நிற்காது. "வெந்நீர் வைத்துக் கொடுத்திருக்கிறேன். துணி துவைத்துக் கொடுத்திருக்கிறேன். துணி தேய்த்துக் கொடுத்திருக்கிறேன். சமைத்துக் கொடுத்திருக்கிறேன்.. இந்தப் பத்து வருடத்தில் நான் அவருக்கு எவ்வளவோ செய்திருக்கறேன். ஆனால், பத்து வருடம் கழித்து அவர் எப்படிப் பேசுகிறார் பாருங்கள்," என்று மனைவி சொல்லலாம். கணவனும் மனைவியைப்பற்றி இப்படிச் சொல்லலாம். செய்த நன்மைகளெல்லாம் தாக்குப்பிடித்து நிற்காது. இதுபோன்ற கூற்றுகள் உறவைக் கட்டியெழுப்புமா? கட்டியெழுப்பாது.

**இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற உறவு; இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பொறுப்பு**. இதுதான் காரணம். எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பொறுப்பு. பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பொறுப்பு. எத்தனை வயதுவரை நாம் பொறுப்பு? எத்தனை வயதுக்குப்பின் அவர்கள் பொறுப்பு?

பதினெட்டு வயதுவரை நாம் பொறுப்பா? அதற்குப்பின் பிள்ளைகளுக்கு யார் பொறுப்பு? அவர்கள்தானா? ஒருவேளை, பதினெட்டு வயதுவரை அவர்கள் நம் நேரடி கண்காணிப்பில் இருக்க லாம். அதுவரை நாம் நேரடியாக பொறுப்பு. ஆனால், பதினெட்டு வயதுக்குப்பின் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது பதினெட்டு வயதுவரை அவர்கள் நம்மிடத்தில் எதைப் பார்த்தார்கள், எதைக் கற்றுக்கொண்டார்கள் என்பதையே சார்ந்திருக்கிறது. "பதினெட்டு வயதுவரை அவர்களுடைய செயல் களுக்கு நாம் பொறுப்பு. அதற்குப்பின் அவர்கள் பொறுப்பு" என்பதல்ல. இது இந்த உலகத்தின் சட்டம், உலகத்தின் பழக்கம். ஒரு பிள்ளைக்கு நாம் செலவழிக்கிறது பதினெட்டு வருடமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது பதினெட்டு மணிநேரமாகவே, பதினெட்டு வார மாகவோ, பதினெட்டு மாதங்களாகவோ இருக்கலாம். அந்தக் காலக்கட்டத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்கு எப்படிப்பட்ட உணவை (உடலுக்குரிய, ஆவிக்குரிய, ஆத்துமாவுக்குரிய) ஊட்டி வளர்த் திருக்கிறார்களோ அதற்கேற்றாற்போல்தான் பிள்ளைகள் பதினெட்டு வயதுக்குப்பின்னும் மலர் கிறார்கள், வளர்கிறார்கள்.

### பிள்ளைகள் நம் பொறுப்பு

சில பெற்றோர்கள், "நாங்கள் நல்லாத்தான் வளர்த்தோம். காலையில் ஜெபம் பண்ணச் சொன்னோம், வேதம் வாசிக்கச் சொன்னோம், வேதம் வாசித்து ஜெபம் பண்ணவில்லையென்றால், காலைச் சிற் றுண்டி கிடையாது என்று சொல்லி கண்டிப்பாக வளர்த்தோம். சகோதர சகோதரிகள் வீட்டுக்கு வரும் போது 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று சொல்லச் சொன்னேன். அவர்கள் சொன்னார்கள். பாட்டுப் பாடும்போது 'அல்லேலூயா' சொல்லச் சொன்னேன். தவறாமல் சபைக்குக் கூட்டிக்கொண்டு போனோம். நாங்கள் பிள்ளையைச் சரியாக வளர்த்தோம். ஆனால், பதினெட்டு வயதுக்குப்பின்புதான் அவன் ரொம்ப மோசமானவாக மாறிவிட்டான்," என்று சொல்வதுண்டு. இப்படிப்பட்ட பெற்றோர்களை நான் பார்த்திருக்கிறேன். பெற்றோர்களைக் குறை சொல்லுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், நாம் நம் கைகளைக் கழுவ முடியாது. முப்பது வயதில், நாற்பது வயதில், ஐம்பது வய தில் அந்தப் பிள்ளை நடப்பதை நாம் பார்ப்போம். அவன் சிறுவனாக இருந்தபோது நாம் அவனுக் குக் கொடுத்த ஒரு காரியம் அல்லது கொடுக்கத் தவறிய ஒரு காரியம் இதற்குக் காரணமாக இருக்கலாம். இப்படிப்பட்ட அறிவு நம்மெல்லாருக்கும் வராது. ஒருவேளை 20 வயதில். 25 வயதில் என் பிள்ளைகள் இப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்றால் "நான் எதைச் செய்ததினால் அல்லது எதைச் செய்யாததினால் அவர்கள் இப்படி யோசிக்கிறார்கள், இப்படிப் பேசுகிறார்கள், இப்படி நடக்கிறார்கள்" என்று உடனே நாம் பகுத்தாராய்ந்து ஒரு முடிவுக்கு வர முடியாது. ஆனால், நிச்சய மாக, என்னுடைய பங்கு என்று ஒன்று இருக்கலாம். அவனுடைய இளம் வயதிலே நான் ஒரு நல்ல தகப்பனாக இருந்திருக்க மாட்டேன். நல்ல தகப்பனாக இருந்திருக்காமல் போயிருக்கலாம் என்றால் கெட்ட தகப்பனாக இருந்திருப்பேன் என்ற பொருள் இல்லை. நான் என்னுடைய கடமைகளில், பொறுப்புகளில், தவறியிருப்பேன். அது நமக்கே தெரியாது. இது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே யுள்ள உறவு.

இந்த உறவு மட்டும் அல்ல, ஒரு கணவன் மனைவிக்கிடையேயுள்ள உறவும் அப்படித்தான்.

### பிதா தந்திருக்கிறார்

எனவே, உறவைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான காரணம் என்ன? **இந்த உறவு தேவன் கொடுத்திருக்கிற உறவு. இது தேவன் கொடுத்திருக்கிற பொறுப்பு.** இது என்னுடைய தெரிந் தெடுத்தல் அல்ல. இதை நான் என்றைக்கு ஒப்புக்கொண்டேனோ அன்றைக்கு அது நிரந்தரம் ஆகி விட்டது. இந்த உறவைப் பராமரிப்பது மட்டும்தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையேதவிர இந்த உறவை அழிக்கும் உரிமை நமக்கு இல்லை. இந்த உறவை அழிக்கிறவன் தேவனுடைய வழி களுக்கு எதிர்த்து நடக்கிறான் என்று பொருள்.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயுள்ள உறவை அழிக்க முடியாது. இந்த உலகத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பார்த்து, "நீ இனி என் பிள்ளையே இல்லை" என்றும், பிள்ளைகள் தங்கள் பெற் றோர்களைப் பார்த்து, "இனி நீங்கள் என் பெற்றோரே இல்லை," என்றும் சொல்லக் கேள்விப்பட் டிருக்கிறேன். இது வெற்று வார்த்தைகள், மக்கள் அறிவீனமாகப் பேசுகிற வார்த்தைகள், இது அவ ரவர் மனக்கிலேசத்தால் பேசுகிற வார்த்தைகள். இந்த வார்த்தைகள் ஒருநாளும் உண்மையாக முடி யாது.

ஆனால், தங்களுக்குக் கொஞ்சம் இடைஞ்சலாக இருக்கும் உறவுகளை வெட்டிவிடலாம் என்று இந்த உலகம் கருதுகிறது. "யூதாசா, அவனுடைய உறவு நல்ல உறவு அல்ல; எனவே, யூதாசை நாம்

வெட்டிவிடலாம்; கழற்றிவிட்டுவிடலாம்," என்பது இந்த உலகத்தின் எண்ணம். யூதாசின் உறவை வெட்டிவிடுவதற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் போதுமான காரணங்கள் இருந்ததா இல்லையா? யூதாசின் உறவை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெட்டிவிட்டாரா அல்லது யூதாசே வெட்டிக்கொண்டானா? அதை அவர் செய்யவில்லை. உறவை வெட்டுவது, அறுப்பது, அழிப்பது அல்லது இல்பொருளாக்குவது நம்முடைய வேலையல்ல, அது நம்முடைய உரிமையும் இல்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களை, "பிதாவானவர் எனக்குத் தந்த ஆடுகள்" *(யோவான் 10:29)* என்று அவர் சொல்லுகிறார். "என்னுடைய பிதா இவர்களை எனக்குக் கொடுத்திருக்கிறார், " என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் எண்ணம், உறுதிப்பாடு.

நாம் ஒரு சிலருக்கு நற்செய்தி அறிவிக்கிறோம். அவர்களைக் கிறிஸ்துவிடம் நடத்துகிறோம். இதன் பொருள் என்ன? "அவர்கள் என்னை நேசித்து, வாழ்நாள் முழுவதும் என்னுடன்கூடவே இருப்பார்கள் என்பதா?" இல்லை. இது தவறான எண்ணம். "இவர்களெல்லாம் நான் சம்பாதித்த ஆத்துமாக்கள்" என்ற எண்ணம் தவறு. நான் ஒரு நன்மை செய்கிறேன். அதனால் அவர்கள் என்னை மிகவும் நேசித்து, என்னுடனேகூட இருப்பார்கள் என்பதற்காக நாம் நன்மை செய்வதில்லை, செய்யக்கூடாது. இவர்களைப் *பிதா எனக்குக் கொடுத்திருக்கிறார்*. எனவே, நான் அவர்களைப் பராமரிக்கிறேன். அவர்கள் என் அன்பை உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி. அவர்கள் என் நன்மையைப் பாராட்டினாலும் சரி, பாராட்டாவிட்டாலும் சரி. *பிதா எனக்குக் கொடுத்திருக்கிறார்*. எனவே, நான் அவர்களுக்கு என்ன நன்மையைச் செய்து, நான் அவர்களை எப்படிப் பராமரிக்கவேண்டுமோ அப்படி நன்மைகளைச் செய்து, அன்பைக் காண்பித்து, கண்டிப்பைக் காண்பித்துத் திருத்தி, கடிந்துகொண்டு, அவர்களுடைய கால்களைக் கழுவி உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கு எல்லாவற்றையும் செய்தார். அவர் அவர்களுடைய கால்களைக் கழுவினார். ஏனென்றால், ஒரேவொரு காரியம்தான். "அவர்கள் பிதா எனக்குக் கொடுத்த ஆடுகள்." யோவான் தன் நற்செய்தியில் இதைப்பற்றித் தெளிவாக எழுதுகிறார்.

சீடர்களைக்குறித்து இயேசு கிறிஸ்துவுக்கு எப்போதாவது சந்தேகம் வந்திருக்குமா? பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முந்தைய இரவு முழுவதும் அவர் ஜெபித்தார் என்று லூக்கா தன் நற்செய்தியில் எழுதுகிறார். அவர் எப்போதாவது, "ஒருவேளை அந்த இரவு நான் ஒழுங்காக ஜெபிக்கவில்லையோ!" என்று நினைத்திருப்பாரா?

அவர் இரவு முழுவதும் ஜெபித்தார் என்பதை வாசித்தவுடன் மக்கள் அதை ஆதாரமாகக்கொண்டு முழு இரவு ஜெபத்தை ஆரம்பித்துவிட்டார்கள். இதன் பொருள் என்னவென்றால், சில முக்கியமான முடிவுகள், தீர்மானங்கள், எடுப்பதற்குமுன் ஒருவேளை இரவு முழுவதும் உபவாசித்து ஜெபிப்பது அவசியமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப்பதற்குமுன் ஒரேவோர் இரவு மட்டும் அல்ல, பல இரவுகள் ஜெபிப்பது நல்லது. பின்னாட்களில் துக்கத்தோடு பல இரவுகள் துக்கத்தால் விழித்திருப்பதைவிட முந்தியே பல இரவுகள் விழித்திருந்து ஜெபிப்பது நல்லது.

இது நூதனமான வழியாக இருக்கிறதே என்று சிலர் நினைக்கலாம். இன்று இந்த உலகத்தின் வழி என்ன? நல்ல மனைவியோ அல்லது கணவனோ வேண்டுமென்றால் திருமண ஏற்பாடு செய்கிற எத்தனையோ இணையதளங்கள் இருக்கின்றன. அதில் பதிவுசெய்துவிட்டால் காரியங்கள் எவ்வளவு எளிதாக முடிந்துவிடும். இதைவிட்டுவிட்டு இரவு முழுவதும் ஜெபிக்கச் சொல்லுகிறீர்களே என்று நினைக்கத் தோன்றும்.

இந்தப் பன்னிரெண்டுபேரைத் தெரிந்தெடுப்பது மிக மிக முக்கியமான காரியம். எனவே, அவர் இரவு முழுவதும் ஜெபித்தார். ஜெபித்தபின், காலையில் அவர் மலையிலிருந்து இறங்கிவருகிறார். இந்த பன்னிரெண்டுபேரைத் தெரிந்தெடுக்கிறார். இப்போது யூதாசின் நிலைமை தெரிய வருகிறது. தெரிய வரும்போது இயேசு கிறிஸ்து என்ன நினைத்திருப்பார்? "தவறாக முடிவெடுத்துவிட்டோமோ!" என்று நினைத்தாரா? நாமாக இருந்தால் இந்த எண்ணம் வருமா வராதா? "அது எப்படி ஒரு திருடனை அப்போஸ்தலனாகத் தெரிந்தெடுத்தேன்? பிதா என் கண்களை மறைத்துவிட்டாரா?" என்று நினைத்தாரா? இதெல்லாம் கேள்வியே இல்லை.

"நான் தவறு செய்துவிட்டேனா? ஒருவேளை இந்த மனைவியை அல்லது கணவனைத் தெரிந்தெடுத்த தில் நான் தவறு செய்துவிட்டேனோ!" என்று கல்யாணம் ஆனபிறகு இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் உயர்ந்தரக முட்டாள்கள்.

"யூதாசைத் தெரிந்தெடுப்பதில் நான் தவறுசெய்துவிட்டேனோ!" காரியம் தவறா தவறில்லையா என்பதைப்பற்றியதல்ல. "இதைப் பிதாவானவர் கொடுத்திருக்கிறார். சரி. இப்போது இந்த யூதாசை நான் என்ன செய்யலாம்? இவனால் மற்றவர்களும் கெட்டுவிடக் கூடாது. இவன் கையில் கொடுக்கிற பணமெல்லாம் ஓட்டைப் பானையில் ஊற்றுகிற தண்ணீரைப்போல் ஒழுகிப்போய்க்கொண்டிருக்கிறது," என்றாவது நினைத்தாரா? இல்லையே! ஏனென்றால், அவன் பணப் பையில் கைபோடுகிறவனா யிருந்தான் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தெரியும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யூதாசோடு உள்ள உறவை எப்படிக் கட்டியெழுப்பினார், பேணிப்பராமரித்தார், காத்தார், வளர்த்தார்? ஓர் எடுத்துக்காட்டு தருக. "அவனை விரட்டிவிடவில்லையே! அதுவே பெரிய கட்டியெழுப்புதல்தானே!" என்று சொல்லுகிறீர்களா? இந்த உறவைப் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும,? கட்டியெழுப்ப வேண்டும்; எப்படியாவது ஓர் இசைவான, நேர்த்தியான, இனிய உறவுக்கு யூதாஸ் வந்துவிடமாட்டானா என்பதற்காக ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து என்ன செய்தார்? மிக முக்கியமான ஒரு காரியம். அவனைப்பற்றி அவர் மற்ற சீடர்களிடம் எதுவும் சொல்லவில்லை என்று சொல்லலாம். ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் அவர் அவனுடைய பொறுப்பை, பணத்தைக் கையாடுகிற பொறுப்பை, மாற்றவே யில்லை.

ஆகவே, நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள முடியும். அந்த உறவைப் பராமரிப்பதற்காகவும், பாதுகாப்ப தற்காகவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு பெரிய கிரயம் செலுத்தினார். அவர் சிலுவையின் வழியில் நடந்தார். யூதாசோடு உள்ள உறவில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்படி நடந்தார் என்றால், எனக்குத் தெரிந்த ஒரேவொரு வார்த்தை *சிலுவை*. உறவை எப்படிக் கட்டியெழுப்புவது? சிலுவையின் வழியில்தான். யூதாசே உறவை மறுத்துப்போகிறானேதவிர ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவனையோ, அவனுடைய உறவையோ ஒருநாளும் மறுக்கவில்லை, அறுத்துவிடவில்லை. அப்போஸ்தலன் என்ற உறவைக்கூட அவர் அறுக்கவில்லை.

இதுபோல சகோதர சகோதரிகளோடு உள்ள ஆவிக்குரிய உறவு, இரத்தசம்பந்தமான உறவு, கண வன் மனைவிக்கிடையேயுள்ள உடன்படிக்கையின் உறவு இப்படிப் பல உறவுகள் உள்ளன. நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக உடனே வெட்டிவிடலாமா? அவர்கள் எனக்குத் தீமை செய்துவிட்டார்கள் என்பதற்காக "நான் இனிமேல் இந்த உறவை வைத்துக்கொள்ளப்போவதில்லை" என்று சொல்ல லாமா? அல்லது "அவர்கள் எனக்குத் தேவையான சமயத்தில் தேவையான நன்மையைச் செய்ய வில்லை. எனவே அவர்களோடு நான் எந்த உறவும் வைத்துக்கொள்ளப்போவதில்லை" என்று சொல்லலாமா? அல்லது "நான் அவர்களுக்கு நன்மை செய்தேன். அவர்களோ நன்றிகெட்டவர்களாகி விட்டார்கள். நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று. அவர்கள் நான் செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிட்டார்கள். எனவே, அவர்கள் உறவுகொள்வதற்குத் தகுதியற்ற வர்கள்" என்று உறவை வெட்டிவிடலாமா? இதுவல்ல காரியம். *இந்த உறவு பிதா தந்த உறவா இல்லையா என்பதுதான் கேள்வி. இந்த உறவு பிதா தந்த உறவு என்றால் அதைப் பராமரிப்பதும், கட்டியெழுப்புவதும் மட்டுமே நம்முடைய பொறுப்பு.*

இரண்டு மனிதர்கள் ஒரே சூழ்நிலையைப் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒரே காட்சியை, ஒரே நிகழ்ச்சியைப் பார்க்கிறார்கள். ஒரு மனிதன் மனிதர்கள் பேசுவதையும், போவதையும், வரு வதையும் பார்க்கிறான். இன்னொருவர் பிதாவானவர் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதைப் பார்க் கிறார். ஒரு மனிதன் மல்குசையும் மற்ற போர்வீரர்களையும் பார்க்கிறான். அவர்கள் தீவட்டிக ளோடும், தடிகளோடும் வருவதைப் பார்க்கிறான். அவர்கள் கைகளில் பெரிய பெரிய வாள்கள் இருப்பதைப் பார்க்கிறான். எனவே, அவர்களைத் தானும் வாளால் எதிர்கொள்வதற்குத் தயாராகி றான். இன்னொரு மனிதர் பிதாவைப் பார்க்கிறார். பிதா அரசாளுகை செய்கிறார் என்று பார்க்கிறார். "இது பிதா எனக்குக் கொடுத்த பாத்திரம்" என்பதைப் பார்க்கிறார்.

கணவன் மனைவிக்கிடையே அல்லது சகோதர சகோதரிகளுக்கிடையே அல்லது பெற்றோர் பிள்ளை களுக்கிடையேயுள்ள உறவில் ஒரு இக்கட்டான சூழ்நிலை வருகிறது என்று வைத்துக்கொள்வோம். நாம் பொதுவாகக் காரியங்களை மேலோட்டமாகப் பார்ப்போம். "அவர் இப்படிப் பேசினார். இவர் இப்படிச் செய்தார். நான் இப்படிக் கேள்விப்பட்டேன்," என்று சொல்வோம். மக்கள் சொல்வதைக் கேட்பது சிரமமாக இருக்கும். அவர்கள் ஆதியோடு அந்தமாகப் பெரிய கதை சொல்வார்கள். சிலர் உறவுகளை முறிப்பதற்குமுன் ஆயிரம் காரியங்கள் சொல்வார்கள். "இன்று நேற்றல்ல, கடந்த 10, 20 வருடமாக இது நடந்துகொண்டிருக்கிறது," என்று சொல்வார்கள். "இன்றைக்கா நேற்றா இவர்? கல் யாணம் ஆகி 25 வருடம் ஆகிவிட்டது. ஒருநாள்கூட அவர் துணியை அவர் துவைத்தது கிடை

யாது," என்று சொல்லியிருக்கிறார்கள். "சகோதரியே, இது 25 வருடங்களுக்குமுன்பே உங்களுக் குத் தெரியும் இல்லையா? 25 வருடங்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அப் போதே நீங்கள் இதைச் சரிசெய்து இருக்கலாமே!. ஐயா, துணி துவைக்கிற காரியத்தில் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வந்துவிடுவோம். நானும் வேலைக்குப் போகிறேன். நீரும் வேலைக்குப் போகிறீர். உங்களுடைய துணியை நீங்கள்தான் துவைத்துக்கொள்ள வேண்டும். நான் உங்கள்மேல் அன்பு வைத்திருக்கிறேன். ஆனாலும், துணி துவைக்கிற வேலையை நீர்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்," என்று அன்றைக்கே சொல்லியிருக்கலாமே! இதை ஏன் 25 வருடங்கள் கழித்துச் சொல்ல வேண்டும்? இந்தக் காரியம் 25 வருடங்களுக்குமுன் ஒரு குறைபாடாகத் தோன்றவில்லை. இப்போது அது பெரிய குறைபாடாகத் தோன்றுகிறது. ஏன், 5 வருடம், 10 வருடம், 20, 30 வருடம் என்று போகப் போக ஆள் யார் என்று தெரிந்துவிடுகிறது அல்லவா? முதல்நாளில் நாம் புத்தம்புதிதாக இருப் போம். ஒருவருக்கொருவர் நாம் தேவதூதர்களைப்போல் இருப்போம். "அவர் பண்ணுகிற ஜெபம் என்ன? பிரசங்கம் என்ன? உபவாசம் என்ன? ஊழியம் என்ன?" ஆகியவைகள் தெரியும். 10. 20. 30 வருடங்கள் கழித்தபின் அவருடைய பிரசங்கமெல்லாம் மறந்துபோகும். ஜெபமெல்லாம் மறந்து போகும். இவர் எப்படிப்பட்ட ஆள்? "இவர் காலையில் ஒழுங்காக நேரத்துக்கு எழுந்திருக்க மாட் டார். துணி ஒழுங்காகத் துவைக்கமாட்டார்." இப்படி ஆயிரம் காரியங்கள்.

ஒரு சகோதரி சொன்னார்கள். "அவர் பொதுவான வங்கிக் கணக்கை வைத்துக்கொள்ள மறுக்கிறார் இரண்டுபேரும் சேர்ந்து வங்கிக்கணக்கை வைத்துக்கொள்வோம் என்றால் அவர் ஒப்புக்கொள்ள மாட் டேன் என்கிறார். அதனால் அவருக்கு என்மேல் நம்பிக்கையே கிடையாது." இது 20 வருடம் கழித்து ஒரு மனைவி தன் கணவனைக்குறித்துச் சொல்லுகிற குற்றச்சாட்டு. அப்போது நான், "சரி, பொது வான வங்கிக் கணக்கை வைத்துக்கொண்டால் உங்கள் பிரச்சினை தீர்ந்துவிடுமா?" என்று கேட்டேன். உடனே அவர்கள், "இல்லை இல்லை. இதுபோல் ஆயிரம் காரியங்கள் இருக்கின்றன," என்றார்கள். "நீதானே சொன்னாய். வங்கிக் கணக்கைப் பொதுவாக வைத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லு கிறார் என்று." "ATM அட்டையை அவர் என்னிடம் தர வேண்டும்." இது அடுத்த குற்றச்சாட்டு.

காலையில் வேலைக்குச் செல்லும்போது சில சமயங்களில் நான் இப்படி நினைத்ததுண்டு. கர்த்தர் என்மேல் அன்பாயிருந்தால், "செலவுக்குக் காசு இருக்கிறதா?" என்று மனைவி கேட்க வேண்டும். உண்மையிலேயே கர்த்தர் என்னைப் பராமரித்தால், கர்த்தர் என்மேல் அன்புகூர்ந்தால் காரியங்கள் நடக்கும். நாம் கொஞ்சம் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். ஏதோவொரு வகையில் தேவன் அந்த அன்பைக் காட்ட வேண்டும். "உங்களிடம் காசு இருக்கிறதா?" என்று மனைவி கேட்க வேண்டும். கேட்கவில்லையென்றால், "காசு இருக்கிறதா இல்லையா என்று கேட்கும் அளவுக்குக்கூட உனக்கு என்மேல் அன்பு இல்லை" என்று சொல்லக்கூடாது, நினைக்கவும் கூடாது. கர்த்தரிடத்தில் என்னுடைய பெறுமானம், தகுதி, இவ்வளவுதான் என்பதுதான் அதன் பொருள். பெறுமானம் என்றால் மதிப்பு.

விசுவாச வாழ்க்கை என்றால் என்ன? கர்த்தர் நம்மைப்பற்றிய ஒரு கவனத்தை, அக்கறையை, எண் ணத்தை, மற்றவர்களுடைய இருதயத்தில் வைக்க வேண்டும். "என் மனைவிக்கு என்மேல் அன்பு இல்லை," என்று கணவனும், மனைவியைப்பற்றி கணவன், "அவள் எனக்குக் கீழ்ப்படிவதேயில்லை," என்றும் குறைசொல்லுவதற்கு வழியில்லை.

எனவே, அருமையான பரிசுத்தவான்களே, நான் உங்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கை தருகிறேன். இன்றோ நாளையோ எல்லா உறவுகளும் புயல்களின் வழியாகப் போகும், நான் சொல்வதை எடுத் துக்கொள்ளுங்கள். எல்லா உறவுகளும் அடி வாங்கும். **எல்லா உறவுகளும்**. 40, 50 வருடங்களுக் குப்பிறகும். எந்த உறவும் இதற்கு விதிவிலக்கல்ல. நான் சொல்வதை மனதில் உறுதியாகப் பதித்துக்கொள்ளுங்கள்.

"இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரம் அல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன். அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல் மாறிப்போம்" (எபி. 12:26, 27). அசைக்கப்படாதவைகள் மட்டுமே நிற்கும். அது என்ன அசைக்கப் படாதவை? நம்முடைய உறவுகள் வெறுமனே மேலோட்டமான உறவாக இருந்தால் நிலைநிற்காது. அவை மாறிப்போம். அவர் காசு தருகிறார், சோறு தருகிறார், துணி தருகிறார் போன்ற மேலோட்ட மான உறவாக இருந்தால் அவைகள் அசைந்துவிடும். தேவன் ஒருதரம் பூமியை அசையப் பண்ணுவேன் என்று சொல்லுகிறார். அப்படியானால் என்ன பொருள்? *எது கிறிஸ்துவுக்குரியதோ, எது சிலுவையினூடாய்ச் சென்று உயிர்த்தெழுதலுக்குள் வந்திருக்கிறதோ அது மட்டும்தான் அந்த அசைப்புக்குப்பின் நிற்கும்.*

யாருக்காவது நீங்கள் நன்மைசெய்தபின் அந்த நன்மையை அவர்கள் மறந்துபோனால் தயவுசெய்து அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்.. கணவன் மனைவி உட்பட. "என் மனைவிக்கு நான் இப்படிச் செய்தேன். என் கணவனுக்கு நான் இப்படிச் செய்தேன். ஆனால், அவன், அவள், அதன் மதிப்பை உணரவில்லை," என்று ஒருநாளும் எண்ண வேண்டாம். இது நான் சொல்லுகிற முதலாவது காரியம்.

இரண்டாவது, என்ன அடிப்படையில் உறவுகளைப் பராமரிக்க வேண்டும்? *இது பிதா தந்த உறவு.* ஒரு நபரைத் தேவன் நம் வாழ்க்கையில் கொண்டுவருகிறார். என் அப்பாவை நான் மாற்ற முடியுமா? என் மகனை அல்லது மகளை நான் மாற்றமுடியுமா? முடியாது. மனைவியை மாற்ற முடியுமா? கணவனை மாற்ற முடியுமா என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? மாற்ற முடியும் என்று இந்த உலகம் சொல்லும். சகோதர சகோதரிகளை மாற்ற முடியுமா? மாற்றலாம் என்று உலகம் சொல்லும்.

"இந்த சபை பிடிக்கவில்லையென்றால் இன்னொரு சபைக்குப் போகலாமே என்று," உலகம் சொல்லும். இப்படிப்பட்ட மனப்பாங்குக்குக் காரணம் என்ன? இது பிதா தந்த உறவு என்பதை நாம் இனங்காணவில்லை. இந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு நாம் மற்றவர்களைச் சிறைப்படுத்தக் கூடாது. மற்றவர்களைக் கைதுசெய்து அடக்கிவைப்பதற்காக நாம் இதைப் பயன்படுத்தக்கூடாது. "சகோதரனே, இது பிதா தந்த உறவு. அதனால் நீங்கள் வேறு எங்கும் போகக்கூடாது," என்று பயமுறுத்தக்கூடாது. அதுபோல, "எனக்கு விருப்பமானால் நான் உங்களோடு உறவு வைத்துக்கொள்வேன். எனக்கு விருப்பம் இல்லையென்றால் எந்தவிதமான உறவும் வைத்துக்கொள்ள மாட்டேன்," என்று மார்தட்டிக்கொள்ளவும் கூடாது. அப்படியல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களோடு எவ்வளவு அன்போடும், தாழ்மையோடும் தம் உறவைப் பராமரித்தார் என்று பாருங்கள். இது நான் சொல்லுகிற இரண்டாவது காரியம்.

மூன்றாவது, எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒரேவொரு வழிதான். என்ன வழி? சிலுவை வழி. பிதா வானவர் இந்தச் சகோதரனை, சகோதரியை, மனைவியை, கணவனைக் கொடுத்திருக்கிறார். சகோதர சகோதரிகள் நன்றாகப் பாடினாலும் சரி, பாடாவிட்டாலும் சரி, ஜெபித்தாலும் சரி ஜெபிக்காவிட்டாலும் சரி. நான் எந்த அளவுக்குக் கிறிஸ்துவை வாழ முடியுமோ, வழங்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும். என்னுடைய மனைவியோடும் அதேதான். அவர்கள் என்மேல் அன்பு வைத்திருக்கிறார்களா, மதிப்பு வைத்திருக்கிறார்களா, நம்பிக்கை வைத்திருக்கிறார்களா, இது வைத்திருக்கிறார்களா, அது வைத்திருக்கிறார்களா, என்பதல்ல காரியம். பிதாவானவர் அவர்களுக்குமுன்பாகக் கிறிஸ்துவை வாழ்வதற்கு, கிறிஸ்துவை வழங்குவதற்கு..கிறிஸ்துவை வழங்குவது என்றால் என்ன பொருள்? நம்முடைய சொற்களால் வழங்குவது, நம்முடைய செயல்களால் வழங்குவது. எல்லாவற்றாலும். நான் எதையோ அன்பு என்று நினைக்கிறேன்; ஆனால், அவர்கள் அந்த அன்பை என்மேல் காட்டவில்லை. நான் எதையோ மதிப்பு என்று நினைக்கிறேன்; அந்த மதிப்பை அவர்கள் எனக்குத் தரவில்லை. நான் எதையோ அக்கறை என்று நினைக்கிறேன்; அந்த அக்கறையை அவர்கள் என்மேல் காட்டவில்லை.

நான் ஒரு சாட்சி சொல்லித்தான் ஆக வேண்டும். இது என்னை மிகவும் தொட்டது. நான் அவ்வளவு சீக்கிரத்தில துணி எடுக்கப் போகமாட்டேன். சமீபத்தில் ஒருவர் எனக்கு இரண்டு pants எடுத்துக் கொடுத்தார். மிகவும் அற்புதமான துணி. சில சமயங்களில் எனக்கு இப்படிப் பரிசுகள் கிடைத்ததுண்டு. ஆனால், பல சமயங்களில் அவை என் சுவைக்கு ஒத்திருக்கவில்லை. ஆனால், இந்த முறை இந்த இரண்டு pants துணிகளும் என் சுவைக்கு ஏற்றாற்போல் மிகவும் அருமையாக இருந்தது. நான் வழக்கம்போல் நான்கு மாதங்களாகத் தைக்கவில்லை. ஒருநாள் அதைத் தைக்கக் கொடுக்கலாம் என்று நினைத்து அதை எடுத்தேன். அதற்குள் கொஞ்சம் பணம் இருந்தது. கடைக்குப்போய் அதைத் தைப்பதற்கு என்ன கூலி என்று கேட்டேன். அவர் சொன்ன கூலியும் அந்தத் துணிக்குள் இருந்த காசும் சரியாக இருந்தது. எந்தக் கடையில் தைக்க வேண்டும் என்றும் துணி எடுத்துக் கொடுத்தவரே ஏற்கெனவே சொல்லியிருந்தார்.

இது தேவன் காண்பிக்கிற அன்பு. "இவருக்கு நல்ல வேலை, வருமானம், மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள். இவருக்கு ஏன் வாங்கிக்கொடுக்க வேண்டும்" என்பதல்ல. எனக்கு வாங்கித்தர வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இதை நான் சாட்சியாகச் சொல்லுகிறேன்.

தேவனாக அன்பைக் காண்பித்தால் சரி. அப்படி மற்றவர்கள் நம்மேல் அந்த அன்பைக் காண்பிக்காவிட்டால் பரவாயில்லை. கர்த்தருடைய கையிலிருந்து நாம் எதைப் பெறுகிறோமோ அது மட்டுமே நம் வாழ்க்கையில் நிலைவரமான மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தரும். "என் மனைவி என்னைப்

பற்றி அக்கறைப்படவில்லை. என் மனைவி என்மேல் அன்புகாட்டவில்லை. என் மனைவி என்னிடத்தில் மதிப்பு வைக்கவில்லை," என்பதெல்லாம் புலம்பல்.

சில கணவர்கள் 10 வருடம் கழித்து, "மனைவி என்மேல் மதிப்பு வைக்கவில்லை," என்ற ஒரு முடிவுக்கு வருவார்கள். ஏனென்றால், இந்தப் பத்து வருடத்தில் இவருடைய எல்லா குறைபாடுகளும் நிறைபாடுகளும் அவருக்குத் தெரிந்துவிட்டது. அதனால் இவருடைய மதிப்பு கொஞ்சம் குறைவதாக அவர் நினைப்பார். அது உங்களுக்கு மட்டும் அல்ல. உங்களை எந்த அளவுக்கு நெருக்கமாகத் தெரியவருகிறதோ அந்த அளவுக்கு நெருக்கமாக யாரைத் தெரியவந்தாலும் அவர்கள்மேல் மதிப்பு போய்விடும். அதனால் அதை மதிப்பு குறைந்ததாக நீங்கள் நினைக்கவேண்டாம். அவர்கள் மதிப்பார்கள். ஆனால், "என்னை மதிக்கவில்லை, என்னை மதிக்கவில்லை, என்னை மதிக்கவில்லை" என்று நினைத்துக்கொண்டிருப்பதைவிட தேவன் எனக்கு என்ன மதிப்பு வைத்திருக்கிறாரோ, உண்மையிலேயே ஏதாவது மதிப்பு வைத்திருந்தால், அது என் மனைவியின்மூலமாக எனக்குக் காண்பிக்கப் படும். "நீ என்னை மதிக்கிறதேயில்லை. அதனால் நீ என்னை மதிக்கணும்," என்று புகார் செய்ய வேண்டாம். இப்படிச் சொன்னால் என்ன பொருள் தெரியுமா? இது கத்தியைக் காட்டி மிரட்டுவதற்குச் சமானம். "நீ என்னை மதிக்கணும்" என்று சொல்வதால் நாம் பெறுகிற மதிப்பு நமக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவருமா? பரிசுத்த ஆவியானவர் இடைப்பட வேண்டும். "ஆண்டவரே, நீர் என்னை மதித் தாலும் சரி, மதிக்காவிட்டாலும் சரி. மனிதர்கள்மூலம் மதிப்பைக் காண்பித்தாலும் சரி, காண்பிக்கா விட்டாலும் சரி. எந்த மதிப்புமின்றி, ஏன் அவமதிப்போடேயே என் வாழ்க்கையின் கடைசிநிமிடம்வரை வாழ்வதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னைப் பலப்படுத்தும்" அல்லது "நான் துன்பப்படுகிறேன். என்னுடைய துன்பத்தை என் கணவன் புரிந்துகொள்வதேயில்லை. ஆண்டவரே, என் வாழ்க்கையின் கடைசி நிமிடம்வரை என் துன்பத்தை என் கணவன் புரிந்து கொள்ளாவிட்டாலும் சரி, வாழ்ந்துகொள்வதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியினால் பலப்டுத்தும்," என்று ஜெபிக்க வேண்டும்.

"அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனிதரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும் பாடு அநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம். அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம்" (ஏசாயா 53:3). அப்படியானால் என்ன பொருள்? அவர் நமக்காகப் பாடுபட்டார். ஆனால், நாமோ அவருடைய பாடுகளை எண்ணிப்பார்க்கவேயில்லை. அவர் துக்கம் அனுபவித்தார், நமக்காக. ஆனால், அதைப்பற்றி நமக்கு ஒரு எண்ணம்கூடக் கிடையாது. இது மூன்றாவது குறிப்பு.

சிலுவை என்றால் என்னவென்றால், "ஆண்டவரே நீர் எனக்கு என்ன அன்பு, என்ன மதிப்பு, என்ன அக்கறை காண்பிக்க விரும்புகிறீரோ அதை மட்டுமே நான் மனிதர்கள் கைகளிலிருந்து பெற விரும்புகிறேன். அதற்கு மிஞ்சி நான் பெற விரும்பவில்லை." குறிப்பாக என் மனைவி இந்த அக்கறையை என்மேல் காட்டவில்லையென்றால் தேவனே அந்த அக்கறையைக் காண்பிக்கவில்லை என்று பொருள். இப்படித்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். எனக்கு எவ்வளவு அக்கறை தேவையோ அந்த அக்கறையைத் தேவன் காண்பிப்பார். அல்லது ஒரு மனைவி, "என் கணவன் என்மேல் போதுமான அன்பு செலுத்துவதில்லை. போதுமான அளவுக்கு என்மேல் நம்பிக்கை வைப்பதில்லை," என்று நினைத்தால், "தேவனே, நீர் என்ன அன்பு செலுத்துகிறீரோ அந்த அன்பு என் கணவன்மூலம் வந்தால் போதும். அதற்கு மிஞ்சியோ குறைவாக எனக்கு வர வேண்டிய அவசியம் இல்லை," என்று ஜெபிக்க வேண்டும்.

எல்லா உறவுகளும் புயல்களினூடாய்ப் போகும் என்று நான் முதலாவது சொன்னேன். இரண்டாவது, உறவுகள் தேவனால் அருளப்பட்டவை. மூன்றாவது உறவுகளைக் கட்டியெழுப்ப ஒரேவொரு வழி தான் உண்டு. அது சிலுவைவியின் வழி. நம்முடைய பொறுப்பு என்னவோ அதை நாம் நிறைவேற்ற வேண்டும். அடுத்த சாராருடைய பொறுப்பை நிறைவேற்றுவது தேவனுடைய வேலை. பரிசுத்த ஆவியானவருடைய வேலை. தேவன் இதை நமக்கு நடைமுறையில் கற்றுத்தருவாராக. ஆமென்.